

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் பரமக்குடியில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய மாவட்ட கழக செயலாளர் மொழிக்காக போராடி முதலில் உயிர் தியாகம் செய்தவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என வரலாற்று உண்மையை குறிப்பிட்டு உரையாற்றினார், பொதுக்கூட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்துகொண்டு தமிழ் மொழியை பாதுகாக்க உயர் தியாகம் செய்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்துவது நமது கடமை. மொழியை பாதுகாக்க அன்றைய காலகட்டத்தில் இருந்து இன்று மொழிக்காக போராடும் தலைவராக மு.க.ஸ்டாலின் இருந்து வருகிறார். அவர் வழியில் நாமும் செல்லுவோம் என்றார். இக்கூட்த்தில், துலைமை கழக பேச்சாளர்கள் தமிழ்பிரியா, ஒப்பிலாமணி, வா.சந்தானலெட்சுமி ஆகியோர் மொழியை பாதுகாக்க முதல்வர் பின்னால் ஒருங்கிணைத்து செல்வோம். இதில், பரமக்குடி சட்டப்பேரவை உறுப்பினர் செ.முருகேசன்,மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ.என்.இன்ப ரகு, முன்னாள் அமைச்சர் சுந்தர ராஜன்,முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திசைவீரன்,முன்னாள் மாவட்ட செயலாளர் சுப.த.திவாகரன் மற்றும் நகர் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் கீழடியில் 31ம்தேதி முதல்வரால் துவக்கி வைக்கப்பட.உள்ள திறந்தவெளி அருங்காட்சியகப் பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, கீழடி அருங்காட்சியக அலுவலர் சிவானந்தம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவ பிரசாத் ஆகியோர் உள்ளனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்கநாள் பொதுக்கூட்டம் சிந்துபூந்துறையில் மாவட்ட மாணவர் அண அமைப்பாளர் கல்லூரி பாலா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.. உரையாற்றினார்.உடன் மைதீன் கான், ராஜா, ஏ.எல்.எஸ்.லட்சுமணன், சுரேஷ், சு.சுப்பிரமணியன்,கிழக்கு தினேஷ் ராமகிருஷ்ணன் துணை மேயர் ராஜ், ஜெயராஜ்,நாகை சாகுல் ஹமீது, ரகுமாள், ஆ.க.மணி, சுப்பிரமணியன், நமச்சிவாயம்,சாகுல் ஹமீது,சங்கர், காசி மணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்டம் வடக்கு சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதியாக கே.கே நகர் பகுதிக்குட்பட்ட 31வது வார்டு கரும்பாலை பகுதி பொதுமக்களுக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் மூவேந்திரன், அறிவு நிதி, ராதாகிருஷ்ணன், சரவணன் அம்பலம், குரும்பன், அன்பு என்கிற துரை கோபால்சாமி, ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், முத்து மோகன், காத்தவராயன், பவர் மணிகண்டன், தமிழ் சந்திரன், அரசு வழக்கறிஞர் ஜவகர், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.





அலைகடல்
அய்யா. இரா.வெற்றிகொண்டான்
அவர்களுக்கு
15-ஆம் ஆண்டு
நினைவு நாள்

காடு மேடெல்லாம் சுற்றித் திரிந்து
கழகக் குரலை கர்ச்சித்துக்கொண்டிருந்த
சிங்கமே!

தொகை தொகையாய் பகை வீழ்த்தும்
போர் வாட்களாக நீயொருவன்
மின்னிடுவாயே!

சொல்லழகைக் கணையாகப் பூட்டி
மேடையில் நிமிர்ந்து நிற்கும்
உன் வில்லழகைக் கண்டு
நான் வியந்து போற்றிய
காலமெல்லாம் இனி வீண்தானோ?

வார்த்தை சித்தனே
வான் நடுங்க முழக்கமிடும்
ஆண் சிங்கமே!
- முத்தமிழ் அறிஞர் கலைஞர்

ஜனவரி
29
2026



என்றும் தாங்கள் காட்டிய தலைவர் தளபதியார் பாதையில்

சூர்யா வெற்றிகொண்டான் M.A.,LLB.,
கழக சட்டத்துறை இணைச்செயலாளர்

வெ.கொ.கருணாநிதி
நகர கழக செயலாளர், நகர் மன்ற துணைத்தலைவர்

நகர தி.மு.க - ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்.